**DEPOSITION OF WITNESS**

(Chapter XXII Code of Criminal Procedure)

**IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, PERAMBALUR.**

| | | | |
|---|---|---|---|
| Calender : | | Miscellaneous : | |
| Preliminary Register : | | Case No. : | **S.C.27/2020** |
| Sessions : | | | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for : | | Prosecution : | **P.W.4** |
| | | Defence : | **D.W.** |
| | | Court : | **C.W.** |

| | | | |
|---|---|---|---|
| **Name :** | சோபனா | **S/o.(or)W/o. :** | |
| Village : | | Taluk : | |
| Calling : | | Age : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872 of the day of **17.02.2026**

**1வது எதிரி ஆஜரில்லை. மனுதாக்கல் ஏற்பு. 2, 4எதிரிகள் ஆஜர் படுத்தப்பட்டார்கள். 3வது எதிரி ஆஜர்.**

**முதல் விசாரணை:**

நான் பெரம்பலூரில் குடியிருக்கிறேன். கூலி வேலைசெய்கிறேன். வழக்கின் இறந்துபோன வீரமணிகண்டன் என்னுடைய தம்பிஆவார். வழக்கு எதிரிகளை தெரியும். அவர்கள் என்தம்பியின் நண்பர்கள்தான். சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு ஒருநாள் இரவு சுமார் 07.30, 08.00 மணியளவில் என்தம்பியை எதிரிகளுடன் ராஜா என்பவரின் காய்கறி கடை அருகில் வைத்து பார்த்தேன். அன்றுஇரவு 09.00 மணியளவில் ராஜா ஓடிவந்து என்தம்பியை அறுத்துபோட்டுவிட்டதாக சொன்னான். ஓடிபோய் பார்த்தேன். ஹாஸ்டல் வாசல் அருகில் என்தம்பி இறந்துகிடந்தார். பார்த்து கத்தினேன். எல்லோரும் ஓடிவந்தார்கள். எதிரிகள் அய்யனார் மற்றும் ஈசாக் என்பவரை நான் அங்கேயே போலிசில் பிடித்து கொடுத்தேன். அதன்பிறகு என்தம்பி மனைவி புஷ்பராணி காவல்நிலையம் போனார். லோகு, சந்தோஷ், பார்த்தா, டால்டா, ஆனந்து

இன்னொருவர் பெயர் தெரியாது, அவர்கள் அறுத்துபோட்டுவிட்டதாக ராஜா சொன்னார். போலிசார் என்னை அங்கேயே விசாரித்தார்கள்.

**<u>1, 2, 3 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

நான் அரசு மருத்துவமனைக்கு பின்புறம் வசிக்கிறேன். என்னை என்தம்பி இறந்துபோன அன்று அவரது பிரேதத்தின் அருகில் வைத்து விசாரித்தார்கள். தற்போது முதல்விசாரணையில் சொன்னது போன்று தான் போலிசார் விசாரணையின் போது சொன்னேன். என்வீட்டிற்கு பக்கத்தில் அங்காயி கோவில் போகும் வழியில் ராஜா காய்கறி கடை உள்ளது. அன்று ராஜா காய்கறி வியாபாரம் செய்துகொண்டிருந்தார். ராஜாவை எனக்கு எவ்வளவு நாட்களாக தெரியுமென்றால் என்வீட்டின் பின்னால் அவர் வீடு உள்ளது. போலிசார் விசாரணையில் ராஜாவின் அப்பாபெயர் சொல்லவில்லை. போலிசார் விசாரணையின் போது என்வீட்டிற்கு பின்புறம் ராஜாவின் வீடு இருப்பதாக சொன்னேன். நான்கூறுவது போன்று என்வீட்டு அருகில் ராஜா காய்கறி கடை எதுவும் கொரானா காலகட்டத்தில் நடத்தவில்லை என்றும், போலிசார் சொல்லிகொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் சொன்னது போன்று ராஜா கடையில் என்தம்பியும், எதிரிகளும் பேசிகொண்டிருக்கவில்லை என்றால் சரியல்ல. ராஜா என்தம்பி இறந்தது பற்றி நேரடியாக வந்து சொன்னார். அவர் எத்தனை மணிக்கு சொன்னார், நான் எத்தனை மணிக்கு யார்யாருடன் சம்பவஇடம் சென்றேன் என்று போலிசார் விசாரணையில் சொன்னேன். நான்போய் பார்க்கும்போது என்தம்பியின் தலை மற்றும் கழுத்தில் காயம் இருந்ததை பார்த்தேன். தலைஎந்தபக்கம் இருந்தது, கால் எந்தப்பக்கம் இருந்தது என்று நான் போலிசார்விசாரணையில் சொல்லவில்லை. நான் சம்பவஇடம் போகவில்லை என்றும், எதிரிகளால் என்தம்பி இறக்கவில்லை என்றும் போலிசார் சொல்லிகொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**4வது எதிரி தரப்புகுறுக்கு விசாரணை**

அய்யனாரை யாரிடம் ஒப்படைத்தேன் என்றால் அங்கு நிறைய போலிசார் இருந்தார்கள் ஒப்படைத்தேன். சார்பு ஆய்வாளரா, ஆய்வாளரா என்று குறிப்பிட்டு சொல்லஇயலாது. நான் ஒப்படைத்த பின்பு தான் அ.சா.1 காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். நான் அய்யனாரை பிடிக்கும்போது அ.சா.1 அங்கில்லை. அதன்பிறகு வந்தார். நான் போலிசில் பிடித்து கொடுத்து பேசிக்கொண்டிருக்கும்போது வந்தார். அய்யனார் வீடு என்வீட்டிற்கு அருகில் தான் உள்ளது. அசா.1 மற்றும் எனக்கு எதிரி அய்யனாரை ஏற்கனவே தெரியும். அய்யனாரை துறைமங்கலம் பாலத்தின் அருகில் வைத்து பிடிக்கவில்லை. 4வது எதிரிக்கும் இந்த வழக்கு சம்பவத்துக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், அவரை இந்த வழக்கில் பொய்யாக சேர்த்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**: இல்லை

Sd/-V.PADMANABHAN,
Principal District Judge,
Perambalur.